**தெஹியோவிட்ட பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

-----------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 23 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெஹியோவிட்ட பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் இல் உள்ளவாறு பெற வேண்டிய வாடகை வருமானம் ரூபா 261,450 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 378,106 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான பெறுமதி ரூபா 297,935 ஆனமையால் கடன்கொடுத்தோர் ரூபா 80,171 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2016 இன் பொருள் மெய்மையாய்வில் அகற்றப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா 148,950 தொகையை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணக் கணக்கு மற்றும் மூலதனத்திற்கான வருமானம் பங்களிப்புக் கணக்கு என்பன அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 15,802,822 ஆக இருந்த போதிலும், அது ரூபா 9,958,326 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 5,124,496 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) இரண்டு சந்தர்ப்பங்களின் போது நூலகப் புத்தகங்களைக் கொள்வனவு செய்யும் போது கிடைத்த ரூபா 61,715 தொகையான கழிவு, பெற்ற கழிவு, செலவினம், நூலகப் புத்தகம் மற்றும் மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்புக் கணக்குகளில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 13,515,000 பெறுமதியான 03 மோட்டார் வாகனங்கள் கணக்கீடு செய்யப்படாமையினால் மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கு மற்றும் மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன அப்பெறுமதியினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்குரிய 03 நாட்குறிப்புப் பதிவுகள் கணக்கீடு செய்யப்படாமையினால் கடன் கொடுத்தோர் ரூபா 242,488 இனால் அதிகரித்தும் திரண்ட நிதியம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) பொருட் பதிவேட்டுப் புத்தகத்தின் பிரகாரம் காணப்பட்ட ரூபா 3,141,410 பெறுமதியான 12 பொருட் பதிவேட்டு விடயங்கள் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் என்பன மூலதனத்திற்கு வருமானப் பங்களிப்புக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 04இயந்திர உபகரண விடயங்களின் பெறுமதி கணப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாமையினால் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் கணக்கு மற்றும் மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டில் நிதியத்தின் 09 மூலங்களின் கீழ் கிடைத்த ரூபா 23,369,929 தொகை மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 61,440,413 தொகையான மூலதன உதவி, வைப்புப் பெறுவனவு மற்றும் வைப்புச் செலுத்துதலின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் மூலதனச் செலவினம் ரூபா 84,810,342 குறைவாகவும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைக் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் என்பன ரூபா 61,440,413 இனால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

05 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,831,098 ஆக இருந்ததுடன் அதற்குரிய பட்டோலைகள் / அறிக்கைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,589,280 ஆனமையால் ரூபா 3,241,818 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

2009 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற தொங்கல் கணக்கின் செலவு மீதி ரூபா 4,552 தொகையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் 01 வருடத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 15,634,657 ஆகும்.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2010/11 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட பெறுமதி சேர்வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் நிறுத்தி வைத்தல் வரிகளின் கூட்டுமொத்தம் ரூபா 3,015,033 தொகை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உள்நாட்டு இறைவரி

ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படாமல் செலுத்த வேண்டிய கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.4 இனங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகள் | 2,347,087 | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனவரி நிலுவைகளை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 67 மற்றும் 68 ஆம் பிரிவுகள் மற்றும் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி | - | நிர்மாணிக்கப்படுகின்ற சகல கட்டிடங்களும் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முன் தரச் சான்றிதழ் பெற வேண்டியிருந்ததுடன் அவ்வாறின்றி பயன்பாட்டிற்கு எடுக்கப்படுமாயின், நாளொன்றிற்கு ரூபா 50 வீதம் கட்டணமொன்று அறவிட வேண்டிய போதிலும், சபையில் பதிவு செய்துள்ள கட்டிட விண்ணப்பங்கள் தொடர்பாக தரச் சான்றிதழ் விநியோகித்தல் 10 சதவீதத்திற்கும் 18 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப்பிரமாணம் 371(2)ஆ | 112,250 | 03 சந்தர்ப்பங்களின் பேது வழங்கப்பட்ட முற்பணம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 29,865 | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய 08 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 571 | 2,150,567 | 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 880 முதல் 893 வரை | 29,000 | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தரால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பிரிவு | 74,626 | பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற இரண்டு ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | - | 03 வாகனங்களுக்குரிய எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,295,006 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,806,397 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,230,700 | 3,295,460 | 4,629,781 | 4,468,378 | 3,540,000 | 3,734,280 | 4,351,140 | 5,867,568 |
| வாடகை | 8,186,792 | 5,761,318 | 5,942,348 | 1,491,615 | 6,569,200 | 5,506,040 | 4,562,103 | 2,049,018 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 800,000 | 669,600 | 672,350 | 96,518 | 800,000 | 671,210 | 686,850 | 99,268 |
| ஏனைய வருமானம் | 53,602,300 | 45,487,931 | 40,228,387 | 33,967,108 | 58,722,000 | 41,357,202 | 33,938,899 | 25,822,873 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்தபோது வீதவரியும் வரியும், போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தை விட 43 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானம் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தை விட முறையே 27 சதவீதம், 16 சதவீதம் மற்றும் 25 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

### 2.2.3 வீதவரியும் வரியும்

ஆதன வரி ஆதனங்கள் ஆகக் குறைந்தது 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டு வரி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2008 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போதும் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.4 வாடகை

தெஹியோவிட்ட புதிய சந்தைத் தொகுதியின் 26 கடைகளில் 08 கடைகள் மாத்திரம் திறக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாணங்களில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக 18 கடைகள் மூடப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டின் போது சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 2,171,500 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே முதலாவது மாடியில் வங்கியினை நடாத்திச் செல்வதற்கு 319.5 சதுர மீற்றர் உடைய 03 இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மலசலகூட வசதிகள் இல்லாமையின் அடிப்படையில் வங்கியினால் இந்த இடம் வாடகைக்கு எடுக்காமையினால் ரூபா 12,000,000 தொகையான ஒரே தடவையில் கிடைக்கும் பணம் (Key money) மற்றும் ரூபா 305,000 தொகையான வாடகை வருமானம் என்பவற்றை சபை இழந்திருந்தது.

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சுற்றுலாச் சபையில் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டலிருந்து 2009 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் 1 வரை 01 சதவீத அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்காக வியாபார வரி செலுத்த வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொண்டு வரி செலுத்தப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருந்த 27 வியாபாரங்களிலிருந்து வியாபார வரித் தொகை ரூபா 81,000 அறவிடப்படாதிருந்ததுடன் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 12 நிறுவனங்களிலிருந்து அனுமதிப்பத்திரம் பெறப்படாமையினால் ரூபா 48,000 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

### 2.2.6 ஏனைய வருமானம்

**(அ) அறிவித்தல் பதாதைக் கட்டணம்**

விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டணம் அறவிடுவதற்கு உப விதிகளை விதிக்காமல் தற்காலிக அறிவித்தல் பதாதைக்காக ஒரு சதுர அடிக்கு ரூபா 10 உம், நிரந்தர விளம்பர அறிவித்தல் பதாதைகளுக்காக ஆண்டிற்கு ஒரு சதுர அடிக்கு ரூபா 50 வீதப் படி ரூபா 76,560 கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அமுக்க செப்பனிடல் இயந்திரம் (வைப்ரேட்டிங் உருளை) வாடகைக்கு வழங்கல்**

சபைக்குச் சொந்தமான அமுக்க செப்பனிடல் இயந்திரம் உடன்படிக்கையின்றி 2016 செப்தெம்பர் 22 ஆந் திகதி முதல் 2017 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வரை வாடகை அடிப்படையில் தனியார் ஒப்பந்தக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 பெப்ரவரி வரையிலும் இந்த இயந்திரம் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்த வீதியில் செயற்பாடற்று, பாதுகாப்பின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பின்னர் சபையின் செலவினத்தில் இயந்திரம் மீளக் கொண்டு வரப்பட்டு சேர்விஸ் செய்து மீண்டும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் காலப்பகுதிக்குரிய வாடகையாக ரூபா 261,450 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. 2016 செப்தெம்பர் முதல் 2017 ஆகஸ்ட் வரையான காலத்திற்குரிய ரூபா 521,450 தொகையான வாடகை வருமானம் மற்றும் பயன்படுத்தப்பட்ட எரிபொருளுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 142,500 தொகை என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஓட்ட விபரங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.7 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 9,958,326 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 20,900,000 தொகையும் காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பந்தியின் பிரிவின் கீழ் பிரதான 22 விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகளை விதிக்க வேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 04 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்ததுடன் 15 விடயங்களுக்கு மத்திய அரசாலும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் வழங்கப்பட்ட உபவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) தெஹியோவிட்ட பிரதேச சபையின் வீதிகளில் வாகனங்களை நிறுத்தி வைத்தல் மற்றும் அலுவலக வாகனங்களின் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பாக உப விதிகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த உப விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் வாகனத் தரிப்பிடக் கட்டணங்கள் எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் 2017 ஆம் ஆண்டு வரையில் திகலவத்த கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் நிர்மாணித்தலுக்காக ரூபா 26,381,708 ஒட்டுமொத்த செலவினமொன்று செய்யப்பட்டிருந்ததுடன் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலைய மதிப்பீட்டு போட்டியின் போது சபரகமுவ மாகாணத்தின் இரண்டாவது இடத்தின் கேகாலை மாவட்டம் முதல் இடத்தை உரித்தாக்கிக் கொண்டிருந்தது. மீள்சுழற்சி செய்ய முடியாத கழிவுப் பொருட்கள் சபைக்கு பிரச்சினையாகக் காணப்பட்டமையால் தற்காலிக தீர்வாக கழிவுப் பொருட்கள் நிலையத்தில் புதைக்கப்பட்டிருந்தது.

(ii) தெஹியோவிட்ட பிரதேச சபைக்குரிய 2,101 ஆதனவரி அலகுகளை மேவுகை செய்யும் வகையில் 05 பிரிவுகளில் இருந்து கழிவுகள் சேகரிக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக பொதுமக்கள் முறைப்பாடுகள் மற்றும் எதிர்ப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

**(அ) கட்டிட விண்ணப்பங்களை அங்கீகரித்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2007 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை புதிய நிர்மாணங்களுக்காக 802 கட்டிட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் காலப்பகுதிக்காக 106 தரச் சான்றிதழ் மாத்திரம் மற்றும் விநியோகிக்கப்பட்டிருந்தது. தரச் சான்றிதழ் விநியோகிக்கும் சதவீதம் 18 ஐ விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ii) புதிய நிர்மாணங்களுக்காக தரச் சான்றிதழ் வழங்கி புதிய மதிப்பீடொன்றைச் செய்து ஆதன வரி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் தரச் சான்றிதழ் வழங்கப்பட்ட 06 ஆதனங்களுக்காக பழைய ஆதனங்களின் தன்மையின் அடிப்படையில் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது.

**(ஆ) காணிகளைக் கூறுகளாக்கி விற்பனை செய்தல்**

2013, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் காணிகளை கூறிட்டு விற்பனை செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்ட 06 காணிகளில் மதிப்பிடப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் ஒரு சதவீத வரித்தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும், காணிக்

கூறுகளின் விற்பனைப் பெறுமதியின் அடிப்படையில் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### (அ) கையேற்கப்படாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபைக்குச் சொந்தமான மயான நிலங்கள் தொடர்பான விபரங்களின் பிரகாரம் 13 மயான நிலங்கள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 05 மயான நிலங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளைச் சேர்த்து தேவையான கையேற்றல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபரகமுவ மாகாண சபைக்குரிய 11 வாகனங்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்குரிய 02 வாகனங்கள் என்பவற்றின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) சொத்துக்களிலிருந்து வருமானம் பெறப்படாமை

09 மயான நிலங்களை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டு வரப்படாமை

மயான நிலங்களின் கோவைகளில், நிலத்தின் அளவு, விளைவு தொடர்பான விபரம், மரங்கள் தொடர்பான விபரம், வீதிக் குறிப்புக்கள் மற்றும் கட்டிடங்கள் போன்ற பொதுத் தகவல்களைச் சேகரித்து நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஈ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சபைக்குரிய ஒரு வாகனம் 2011 யூலை முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் 11 வாகனங்கள் 2017 ஆம் ஆண்டில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படவில்லை. அதில் 03 வாகனங்கள் 2016 மற்றம் 2017 ஆம் ஆண்டுகளில் பழுதுபார்த்தலுக்காக அனுப்பப்பட்டிருந்த போதிலும், 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்த்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

#### (அ) அல்கொட வீதி வெள்ளத்திலிருந்து பாதுகாத்தல்

(i) அளவிடைப் பத்திரத்தின் பிரகாரம் வீதியில் கொங்கிறீட் ஆளம் 05 அங்குலமாகக் கருதி அளவிடை செய்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் பௌதீக பரிசோதனையின் போது வீதியின் ஆழம் 3 ½ அங்குலத்திற்கும் 4 அங்குலத்திற்கும் இடையில் காணப்பட்டது. வீதியின் ஆழம் ஒரு அங்குலம்

குறைவாக கொங்கிறீட் இடப்பட்டதன் அடிப்படையில் 7.37 கியூப் கொங்கிறீட்டுக்காக ரூபா 309,327 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) அளவிடைப் பத்திரத்தின் பிரகாரம் வீதியில் ABC ஆழம் 03 அங்குலமாகக் கருதி அளவிடை செய்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் பௌதீக தெரிவுப் பரிசோதனையின் போது ABC இடப்பட்டிருக்கவில்லை. இதனால் ABC இடப்படாதிருக்கும் போது 22.12 கியூப்பிற்காக ரூபா 214,412 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) கஹனாவிட்ட மாஹிங்கந்த வீதி**

(i) அளவிடைப் பத்திரத்தின் பிரகாரம் வீதியின் கொங்கிறீட் ஆழம் 05 அங்குலமாகக் கருதி அளவிடை செய்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் பௌதீக பரிசோதனையின் போது வீதியின் ஆழம் 3½ அங்குலத்திற்கும் 4½ அங்குலத்திற்கும் இடையே காணப்பட்டது. வீதியின் ஆழம் அரை அங்குலம் குறைவாக கொங்கிறீட் இடப்பட்டதன் அடிப்படையில் 8.38 கியூப் கொங்கிறீட்டுக்காக ரூபா 398,243 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) அளவிடைப் பத்திரத்தின் பிரகாரம் வீதியில் ABC ஆழம் 04 அங்குலமாகக் கருதி அளவிடை செய்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், பௌதீக தெரிவுப் பரிசோதனையின் போது ABC இடப்பட்டிருக்கவில்லை. இதனால் ABC இடப்படாதிருக்கும் போது 63.9 கியூப் இற்காக ரூபா 719,873 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) உடன்படிக்கை செய்யப்பட்ட ஒப்பந்தகாரரான சபரகமுவ மாகாண அபிவிருத்தி நிர்மாணம் மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபையினால் உடன்படிக்கைக்கு முரணாக உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 மே 23 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 08 செலவின விடயங்களின் ரூபா 2,517,000 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு 100 சதவீதமும் 04 செலவின விடயங்களில் சேமிக்கப்பட்ட நிதிஏற்பாடுகளின் கூட்டுமொத்தம் ரூபா 498,319 தொகை 68 சதவீதத்திற்கும் 96 சதவீதத்திற்கும் இடையிலுமாக கூட்டுமொத்தமாக ரூபா 3,015,319 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) முற்பணப் பதிவேடு சரியான பிரகாரம் நாளதுவரையாக்கப்படாமை |
| | (ii) தொங்கல் கணக்கில் நீண்ட காலமாகக் காணப்படுகின்ற மீதி தீர்த்து வைக்கப்படாமை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) ஆதன வரிக்காக ஆதனங்களின் மதிப்பீடு சரியான பிரகாரம் இடம்பெறாமை. |
| | (ii) நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்காமை. |
| | (iii) வியாபார மற்றும் கைத்தொழில் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு நடாத்தப்படாமை. |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் கவனத்தில் கொள்ளக்கூடிய சேமிப்புக் காணப்பட்டமை |
| | (ii) மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (ஈ) வாகனப் பயன்பாடு | (i) நாளாந்த ஓட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்படாமை |
| | (ii) வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை இடம்பெறாமை |